இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்:10.8.1942 – முரசு: 82 – ஒலி: 48 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 09 – செவ்வாய்க்கிழமை 26 செப்டம்பர் 2023 – திருச்சி ★ ★ 12 + 8 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:82 - Issue 48: Thiruvalluvar Year - 2054 - Purattasi 09 - Tuesday 26 September 2023 - Trichy ★★ 12 + 8 Pages ₹5.00







கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.9.2023) திருப்பூர் மாவட்டம், மேற்கு மண்டல வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் கழக பொதுச் செயலாளரும், அமைச்சருமான துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளரும், அமைச்சருமான கே.என். நேரு, துணை பொதுச் செயலாளர்கள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி, அந்தியூர் செல்வராஜ் எம்.பி.. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, அமைச்சர்கள் சு. முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், கா.ராமச்சந்திரன். மா.மதிவேந்தன், கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள திருச்சி சிவா, என்.ஆர்.இளங்கோ, துணை அமைப்புச் செயலாளர்கள், தாயகம் கவி, ஆஸ்டின், திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் இல.பத்மநாபன், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழகச் செயலாளர்கள், கழகத்தின் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள், மண்டல வாக்குச் சாவடி முகவர்கள் கலந்து கொண்டனர்.

## கட்சிக்காக உழையுங்கள்! மக்களுக்காக உழையுங்கள்!

# வெற்றியே நம் இலக்கு!

## நாடாளுமன்றத் தேர்தலையொட்டி நடைபெற்ற - மேற்கு மண்டல வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்கள் கூட்டத்தில் - ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்க உரை!

**திருப்பூர், செப். 26 -**

**“கட்சிக்காக உழையுங்கள்; மக்களுக்காக உழையுங்கள்! வெற்றியே நம் இலக்கு!” என்று கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நாடாளுமன்றத் தேர்தலையொட்டி திருப்பூரில், நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்கு மண்டல வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் உரையாற்றும் போது வேண்டுகோள் விடுத்தார்.**

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (24-9-2023) திருப்பூரில் (காங்கேயம் படியூர் அருகே) நடைபெற்ற மேற்கு மண்டல கழக வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஆற்றிய உரை வருமாறு :-

மேற்கு மண்டலத்தைச் சார்ந்திருக்கும் பாக முகவர்கள் கூட்டத்தைத்தான் நான், அமைச்சராக இருக்கும் சாமிநாதனிடத்திலும், இந்த மண்டலத்தைச் சார்ந்திருக்கும் மாவட்டக் கழகச் செயலாளர்களிடமும் கூட்டும்படி கூறியிருந்தேன். ஆனால், அவர்கள் பாக முகவர்கள் கூட்டத்தை மட்டுமல்ல, பாக முகவர்களின் மண்டல மாநாட்டையே இங்கே கூட்டியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு எல்லாம் நான் முதலில் என்னுடைய நன்றியைத் தலைமைக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய கழகத்தின் பொதுச் செயலாளர் அண்ணன் துரைமுருகன் அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல, நாம் இந்திய நாடாளுமன்றத்தின் தேர்தலை எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம். நாம் தேர்தல் பணியின் தொடக்கப் புள்ளியான பாக முகவர்கள் கூட்டத்தை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறோம்.

மத்திய மண்டல மாவட்டங்களுக்கான பாக முகவர்கள் கூட்டம் திருச்சியிலும் தென் மண்டல மாவட்டங்களுக்கான பாக முகவர்கள் கூட்டம் இராமநாதபுரத்திலும் நடந்து முடிந்திருக்கிறது. மூன்றாவதாக மேற்கு மண்டல மாவட்டங்களுக்கான கூட்டம் இந்த திருப்பூரில் காங்கேயம் பகுதியில் நடந்து கொண்டிருக்கிறது.

**கழகத்தவர் முகம் காணும் போது - களைப்பு பறந்து போகிறது!**

உங்கள் திருமுகங்களைப் பார்ப்பதற்காகத்தான் நான் திருப்பூர் வந்திருக்கிறேன். என்னைப் பார்ப்பதில் நீங்கள் அடையும் உற்சாகம் ஆர்வத்தை விட உங்களைப் பார்ப்பதில் நான் அடையும் மகிழ்ச்சி என்பது மிக மிக அதிகம். அதற்கு அளவே இல்லை. “ஏன் இவ்வளவு அலைகிறீர்கள்? பயணத்தைக் குறைத்துக் கொள்ளக் கூடாதா?” என்று என் மேல் அக்கறையும் பாசமும் கொண்டவர்கள் சொல்லும்போதெல்லாம் நான் சொல்வது - “கழக உடன்பிறப்புகளையும் தொண்டர்களையும் பார்க்கும்போது நான் அடையும் உற்சாகத்திற்கு ஈடு இணை எதுவும் கிடையாது. என்னுடைய களைப்பு எல்லாம் காற்றாக பறந்து விடுகிறது” என்று சொல்வேன். அப்படியான உற்சாகமான மனநிலையோடு தான் உங்கள் முன்னால் கம்பீரமாக தெம்போடு நிற்கிறேன்.

> **மோடி ஆட்சி ரிவர்ஸ் கியரில் போய்க் கொண்டிருக்கிறது.**
>
> **ஒன்றியத்தில் ஒரு ஆட்சி இருக்கிறது. அதுவும் இரண்டாவது முறையாக ஆட்சியில் இருக்கிறது. மூன்றாவது முறை வரப்போவதில்லை. வரக் கூடாது. அதுதான் முக்கியம். பத்து ஆண்டு ஆகப்போகிறது. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்ற வில்லை. சொன்னதற்கு மாறாக, ரிவர்ஸ் கியரில் போய்க்கொண்டிருக்கிறது.**

**பெரியாரும் - அண்ணாவும் முதன்முதலில் சந்தித்த பெருமைக்குரிய ஊர்!**

இது திருப்பூர். திராவிட இயக்கம் கருவான ஊர். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களும், காஞ்சி தந்த வள்ளுவன் பேரறிஞர் அண்ணா அவர்களும் முதன் முதலில் சந்தித்த ஊர் இந்த திருப்பூர்.

## தமிழ்நாட்டில் டெபாசிட் வாங்கக் கூட தகுதியில்லாத பா.ஜ.க.!

அந்த வகையில் பல்வேறு அரசியல் திருப்பங்களுக்கு அடித்தளமிட்ட ஊர்தான் இந்த திருப்பூர்! தியாகத்தின் திருவுருவமாகப் போற்றப்படும் கொடி காத்த குமரன் வாழ்ந்த ஊர் இந்த திருப்பூர்.

இந்தியை எதிர்த்தும் தமிழைக் காக்கவும் 1965ஆம் ஆண்டு போராட்டம் நடந்தபோது கல்லூரி மாணவர்கள் மட்டுமல்ல பள்ளி மாணவர்களும் அதிகம் பங்கெடுத்த ஊர் இந்த திருப்பூர். இப்படிப்பட்ட பெருமைமிகு திருப்பூரை மாநகராட்சியாக உயர்த்தியது மட்டுமல்ல, இந்தத் திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கியவரும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான். இப்படிப்பட்ட பெருமைக்குரிய இந்தத் திருப்பூரில் இன்று பாக முகவர்கள் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

**அருமைச் சகோதரர் - அமைச்சர் மு.பெ.சாமிநாதனைப் பாராட்டுகிறேன்!**

இதை மிகச் சிறப்போடும் எழுச்சியோடும் ஏற்பாடு செய்திருக்கிற மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் என்னுடைய அருமைச் சகோதரர் மு.பெ.சாமிநாதன் அவர்களைப் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன்.

மு.பெ. என்பது அவரது முன்னெழுத்தாக இருந்தாலும், உண்மையில் அவர், ‘மூப்பே அடையாத சாமிநாதன்’ என்று சொல்லத்தக்க வகையில் இளமையாவே காட்சி அளிப்பார். இளைஞரணியில் என்னுடன் தொடக்க காலத்தில் இருந்தே பயணித்தவர் சாமிநாதன்.

வெள்ளக்கோவில் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளராக இருந்து மாநில இளைஞரணிச் செயலாளர் என்ற தகுதிக்கு உயர்ந்தவர் அவர். இளைஞரணிச் செயலாளர் பொறுப்பு என்னிடம் இருந்து அவருக்குத்தான் போனது. அதில் இருந்தே அவரின் உழைப்பையும் திறமையையும் தெரிந்து கொள்ளலாம்.

**பொறுப்பை உணர்ந்து அமைதியாகப் பணியாற்றுபவர் அமைச்சர் சாமிநாதன்!**

தலைவர் கலைஞர் அவர்களது அமைச்சரவையில் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராகச் சிறப்பாகப் பணியாற்றினார். இப்போது, நம்முடைய அமைச்சரவையில் செய்தித்துறை அமைச்சராகப் பணியாற்றி வருகிறார். நிறைகுடம் தளும்பாது என்பதற்கு ஏற்ப, அடக்கமாவும் – அமைதியாவும் – அதே நேரத்தில் பொறுப்பை உணர்ந்தும் பணியாற்றக் கூடியவர்தான் சாமிநாதன்.

அவருக்கு தோளாடு தோள் நின்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள் எல்லாருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை மீண்டும் ஒருமுறை தலைமைக் கழகத்தின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தலைமையில், கடந்த 22.03.2023 அன்றைக்கு சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் இருந்தே, நாம் தேர்தல் பணிகளைத் தொடங்கிவிட்டோம். தமிழ்நாடு முழுவதும் பூத் கமிட்டிகளை அமைத்திருக்கிறோம். ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.



கோடிக்கணக்கான உறுப்பினர்கள் கொண்ட இயக்கத்திற்காக, தேர்தல் பணிகளைச் செய்யப் போகிறவர்கள் நீங்கள். பல கட்ட ஆய்வுகளுக்குப் பின்புதான் ‘வாக்குச்சாவடி பொறுப்பாளர்’ என்ற அடையாள அட்டை உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

**பல்வேறு தலைப்புகளில் வகுப்பெடுத்த கழக முன்னோடிகள்!**

இந்த அட்டையைப் பெற்ற மேற்கு மாவட்டங்களின் பொறுப்பாளர்கள் மட்டும் இங்கு முதல்கட்டமாக அழைக்கப்பட்டு இருக்கிறீர்கள். உங்களுக்கான வகுப்புகள் காலை முதலே நடந்துகொண்டு வருகிறது.

* ‘வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்களின் கடமைகளும் பணிகளும்’ என்ற தலைப்பில் தலைசிறந்த வழக்கறிஞரும், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான என். ஆர். இளங்கோ அவர்களும்

* ‘வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணிகள் மற்றும் அதன் முக்கியத்து வம்’ குறித்து செயல் வீரர் மாவட்டச் செயலாளர் ராஜேஸ் குமார் எம்.பி. அவர்களும்

* ‘சமூக வலைத்தளங்களின் பயன்பாடும், செயல்படுத்த வேண்டிய முறையும்’ என்பது குறித்து கழகத் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் சேலம் தரணிதரன் அவர்களும் உங்களுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

**கொள்கை வழிகாட்டுதலும் தேர்தல் பயிற்சியும் வழங்கிய பாசறை இது!**

* கழகத்தின் வரலாறு அடிப்படைக் கொள்கைகள் திராவிட இயக்கத்தின் கோட்பாடுகள் நவீன தமிழ்நாட்டை உருவாக்க நாம் எடுத்திருக்கும் முயற்சிகள் திராவிட மாடல் ஆட்சி ஆகியவை குறித்த அடிப்படைத் தகவல்களை கழகக் கொள்கை பரப்புச் செயலாளரும், கழக மாநிலங்களவைக் குழுத் தலைவருமான என்னுடைய அருமைச் சகோதரர் திருச்சி சிவா எம்.பி. அவர்களும் – மாநிலத் திட்டக் குழுத் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன் அவர்களும் உங்களுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

இதன் மூலமாக கொள்கை வழிகாட்டுதலும் தேர்தல் பயிற்சியும் உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இவை எல்லாவற்றையும் மனதில் வைத்து நீங்கள் செயல்பட வேண்டும். இவை இந்தத் தேர்தலுக்கு மட்டுமல்ல, எந்தத் தேர்தலுக்கும் பயன்படுத்த வேண்டிய பணி. நாடாளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கி நாம் காத்திருக்கிறோம். இந்த முக்கியமான தேர்தலுக்குத்தான் நீங்கள் வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் ஆகியிருக்கிறீர்கள்.

**வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்களுக்கு - எனது வாழ்த்துகள்! பாராட்டுகள்!**

கழகத்தின் வாக்குச்சாவடி பொறுப்பாளர் என்ற நிலையை அடைந்திருக்கும் உங்கள் எல்லோருக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் நான் மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

* நாமக்கல் கிழக்கு, * நாமக்கல் மேற்கு
* ஈரோடு தெற்கு, * ஈரோடு வடக்கு
* திருப்பூர் வடக்கு, * திருப்பூர் தெற்கு
* கோவை வடக்கு, * கோவை மாநகர்
* கோவை தெற்கு, * கரூர்
* நீலகிரி, * சேலம் மேற்கு
* சேலம் மத்தி * சேலம் கிழக்கு ஆகிய மாவட்டக் கழகங்களைச் சேர்ந்த பொறுப்பாளர்கள் இங்கு கூடியிருக்கிறீர்கள்.

மாவட்டக் கழகச் செயலாளர்களான,

* அமைச்சர் முத்துசாமி, * டி.எம். செல்வகணபதி, * பா.மு.முபாரக், * ஆர். ராஜேந்திரன் எம்.எல்.ஏ., * கே.ஆர்.என். ராஜேஸ்குமார் எம்.பி., * க. செல்வராஜ் எம்.எல்.ஏ., * எஸ்.ஆர். சிவலிங்கம், * என். நல்லசிவம் * என். கார்த்திக், * தளபதி முருகேசன், * இல. பத்மநாபன், எஸ்.எம்.* மதுரா செந்தில், * தொண்டாமுத்தூர் ரவி ஆகியோருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்